# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),**
**நந்தனம், சென்னை- 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 06.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 16135/விசாரணை/E/2022**

| | | |
|---|---|---|
| திரு எம்.எம்.மாயூரம் | . | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>வேளச்சேரி வட்டம் சென்னை | .. | பொது அதிகார அமைப்பு |

******

## ஆணை

1) இவ்வாணையத்தின் 20.05.2025 தேதியிட்ட உத்தரவில், “களஆய்வு செய்வதற்கு வழங்கப்பட்ட பல சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ள மனுதாரர் தவறிவிட்டார் என்பதும் தெரிய வருகிறது.............. எனினும், மனுதாரர் மீண்டும் ஒரு முறை களஆய்வு செய்ய விருப்பம் தெரிவிக்கும்பட்சத்தில், அவருக்கு அவ்வாய்ப்பை வழங்க வேண்டுமென்றும், வயது முதிர்வு காரணமாக அவரால் நேரில் செல்ல இயலாத நிலையில், அவர் பரிந்துரைக்கும் ஒருவரை களஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும்” பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிட்டிருந்தது.

2) அதனை தொடர்ந்து பொதுத் தகவல் அலுவலர் / வேளச்சேரி வட்ட சார் ஆய்வாளர் ஆணையத்தில் 12.03.2026 அன்று ஆஜராகி சமர்ப்பித்த அறிக்கையில், மனுதாரருக்கு 04.02.2025, 05.02.2025 மற்றும் 06.02.2025 ஆகிய தேதிகளில் ஏதாவது ஒரு நாளில் வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி நேரில் ஆவணங்களை பார்வையிட வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டதாகவும், ஆனால் அதன்படி மனுதாரர் ஆஜராகவில்லை என்றும், மனுதாரரை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, வயது முதிர்வு காரணமாக தன்னால் ஆவணங்களை பார்வையிட அலுவலகத்திற்கு நேரில் வர இயலவில்லை என்று தெரிவித்தார் என்றும், ஆகவே, மனுதாரருக்கு 20.03.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக கோரப்பட்ட தகவல்கள் அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், பொதுத் தகவல் அலுவலர் 12.03.2026 நாளிட்டு சமர்ப்பித்த மேற்படி அறிக்கையில், ஏற்கனவே, 20.05.2025 அன்று ஆணையத்தில் நடைபெற்ற விசாரணையின்போது அவர் தெரிவித்த தகவல்களையே திரும்ப தெரிவித்துள்ளார் என்பதையும், ஆணையத்தின் விசாரணைக்கு பின்னர், மனுதாரருக்கு களஆய்வு செய்வதற்கு புதிய அழைப்பாணை எதையும் அனுப்பவில்லை என்பதையும் பதிவு செய்கிறது.

4) **ஆகவே, மனுதாரரருக்கு மீண்டும் ஒரு முறை களஆய்வு செய்ய வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட வேண்டுமென்றும், வயது முதிர்வு காரணமாக அவரால் நேரில் ஆஜராக இயலாத நிலையில், அவர் பரிந்துரைக்கும் ஒருவரை களஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரத்தை அறிக்கையாக பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் 15.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஆணையம் உத்தரவிடுகிறது**.

**ஓம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். S.A 16135/விசாரணை/E/2022</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வேளச்சேரி வட்டம்,
சென்னை

திரு எம்.எம்-மாயூரம்,
ப்ளாட் எண்.29, இரண்டாவது பிரதான சாலை,
வி.ஜி.பி. செல்வா நகர்,
வேளச்சேரி, சென்னை

Copy to File
CR/PA